IN THE COURT OF THE ADDL. DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.158/2020
DEPOSITION OF WITNESS

ஆரம்ப நேரம்:1.10 p.m.

பி.வா.சா. 1 சாட்சி பாலமணிகண்டன் த.பெ.முருகன்

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Additional District Munsif on 16.04.2025 in accordance with the provisions of Act XX141.**

வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

1. அசல் வழக்கை தெய்வபெருமாள், கண்ணன் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். தாவாச் சொத்து சித்தாலை கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். தாவாச் சொத்தின் சர்வே எண் 49/2 என்றால் சரிதான். தாவாச் சொத்தை அரசு 104 பிளாட்டுகளாக பிரித்து வீடு இல்லாதவர்களுக்கு வழங்கியது என்றால் சரிதான். எந்த ஆண்டு வழங்கப்பட்டது என்றால் 2010 ஆகும்.

2. பிளாட்டுகளாக பிரிக்கப்பட்ட வீடுமனைகளை அவரவர் அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். எனது தந்தைக்கு வழங்கப்பட்ட பிளாட் எண் 47 என்றால் சரிதான். மேற்படி 47ம்நம்பர் பிளாட்டை குடிசை போட்டு அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான். மேற்படி 47ம்பிளாட்டை ஒதுக்கியதுதான் பி.வா.சா.ஆ.2 ஆவணம் என்றால் சரிதான். தாவா வழக்கின் 2ம்பிரதிவாதி எனக்கு என்ன உறவு என்றால் எனது அக்காவின் கணவர் ஆவார். மேற்படி 2ம்பிரதிவாதிக்கும் சேர்த்துதான் தாவா வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் சரிதான்.

3. 1ம்வாதிக்கு பிளாட் எண் 56 ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி பிளாட் 56ம்நம்பரில் 1ம்வாதி குடிசைபோட்டு அனுபவித்து வந்தார் என்றால் தெரியாது. 2ம்வாதிக்கு பிளாட் எண் 59 ஒதுக்கப்பட்டது என்றால் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பிறகுதான் தெரியும். வாதிகளின் பிளாட்டுகளான 56 மற்றும் 59ற்கும் எனக்கும் எந்த சம்மந்தமும் கிடையாது என்றால் சரிதான். என்னுடைய பிளாட்டும், வாதிகளின் பிளாட்டும் தொலைவில் உள்ளது என்றால் சரிதான்.

4. 47ம் நம்பர் பிளாட்டில் நான் எந்த கட்டிடமும் கட்டவில்லை என்றால் சரிதான். குடிசைதான் அமைத்தேன். வழக்கின் எதிர்கோரிக்கையில் வாதிகள் எங்களது அனுபவத்தை இடையூறு செய்வதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். வாதிகள் எந்த இடையூறும் செய்யவில்லை என்றால் சரியல்ல. வாதிகளின் பிளாட்டுகளும், எனது பிளாட்டும் தனித்தனியாக உள்ளதால் அவர்கள் என்னை எந்தவிதமான இடைஞ்சலும் செய்யவில்லை என்றும், வாதிகள் கோரும் பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல.

5. பிளாட் எண் 56 மற்றும் 59ல் எனக்கு எந்தவித உரிமையும் இல்லாததால் வாதிகள் கோரும் பரிகாரம் கிடைக்கக்கூடியது என்றால் மேற்படி பிளாட்டை பொறுத்து எனக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை. வாதிகள் எனது அனுபவத்தை இடைஞ்சல் செய்ததாக பொய்யாக நான் எதிர்கோரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

எதிர்கோரிக்கை பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல.

(3, 4 பிரதிவாதிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.)

**மறுவிசாரணை: இல்லை.**

முடிவடையும் நேரம்:1.20p.m.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி
அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்
கையொப்பமிட்டார்.

/sd/E.Manikandan
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.